2005 மார்ச் 4]

வாய்க்கால்களை மேம்படுத்தும் பணிகள் செய்து முடிக்கப் பெற்றதாக அறிகின்றேன். அதன் விவரத்தை அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வலது பக்கம் செல்லும் வாய்க்கால், 53.515 கிலோ மீட்டரில் வெள்ளியணை கண்மாயும், அதனையடுத்து உப்பிடாமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன்புதூர் ஆகிய நான்கு கண்மாய்கள் உள்ளன. குடகனாறு அணையில் மழைக் காலங்களில் கிடைக்கப்பெறும் உபரி நீரைக் கொண்டு, இந்த வெள்ளியணை மற்றும் அதன்கீழ் உள்ள மூன்று கண்மாய்கள் வாயிலாகத் தண்ணீரைத் தேக்கி, அப்பகுதியில் 1,372 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன. இந்தப் பாசனக் கால்வாய்மூலம், ரூ.1,08,73,928 மதிப்பீட்டில் மேம்படுத்தும் பணிகள் யாவும் மார்ச் 2004-ல் முடிக்கப்பட்டுள்ளன. எனவே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, வெள்ளியணை பகுதியில் ஓடும் குடகனாறைத் தூர்வாரவோ அல்லது சீர் செய்யவோ திட்டம் ஏதும் தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 62, திரு. எம். சுப்பையா பாண்டியன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

62—

பாலம் கட்டுதல்

***23909—திரு. எம். சுப்பையா பாண்டியன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், அச்சன்புதூர்—இலத்தூர் செல்லும் சாலையில் அனுமான் நதியில் உள்ள பாலம் இடிந்து விழும் நிலையில் உள்ளதாலும், போக்குவரத்திற்கு ஆபத்தாக உள்ளதாலும் புதிய பாலம் கட்ட அரசிடம் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம், நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செறிக்கின்ற எந்தனது மலரின் தோட்டம்,
சிங்கார வானமதில் முகிலின் கூட்டம்,
விரிக்கின்ற தோகைமயில் ஆடும் ஆட்டம்,
வெளியெங்கும் தெரிகிறது கலையின் கோட்டம்,
அரிக்கின்ற நதியலையில் மரங்கள் ஆட்டம்,
அடைந்துவிட்ட பறவையெல்லாம் இசையைக் கூட்டும்,
இருக்கின்ற எனக்கு அவை களிப்பைக் கூட்டும்,
இறந்த அந்த இளந்தென்றல் இனிப்பை ஊட்டும்.
புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்திலே
வயலெல்லாம் நெற்கதிர்கள் வளைந்தாடும்,
வாய்க்காலில் மீன்கூட்டம் படைகள் ஓடும்,
அயர்ந்தாங்கே அமர்ந்து நான் கவிதை சொல்ல,
அழகான பசும்புற்கள் அணைகள் போடும்,
வேர்வையிலே சோர்வுற்று வீற்றிருந்தாலே
வீசிடுவாள் இளந்தென்றல் என்னைத் தொட்டு
இயற்கையிலே நான் கண்ட இன்பம் அடடா
இந்த அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தையும்
புரட்சித் தலைவியையும் மறக்க மாட்டோம்"

முற்பகல் 10-05

என்று ஏழை எளிய மக்களெல்லாம் இன்றைக்குப் பாராட்டிக் கொண்டிருக்கின்ற வேளையிலே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நெல்லை மாவட்டம், எனது தொகுதிக்குட்பட்ட அச்சன்புதூர்—இலத்தூர் செல்லும் சாலையில் அனுமான் நதியிலுள்ள பாலம் இடிந்து விழும் சூழ்நிலையில் மிகவும் பழுதடைந்த நிலையில்

2005 மார்ச் 4]

உள்ளது. அந்தப் பாலத்தின்மூலம் பயன்பெறும் கிராமங்கள், இலத்தூர், சீவநல்லூர், சித்திராபுரம், நடராஜபுரம், காந்தி காலனி, திருவொற்றியூர், நெடுவயல், பார்வதியாபுரம் ஆகிய கிராமங்களாகும். அந்த கிராமங்களிலுள்ள பொதுமக்கள்தான் இந்தச் சாலையில் செல்கிறார்கள். முதல் விடைக்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று சொன்னார்கள். இதற்கும் சொல்லிவிடுவாரோ என்று நான் பயந்துவிட்டேன். புரட்சித் தலைவி அம்மா ஆட்சிக் காலத்தில் கேட்காமலேயே தரக்கூடிய அரசு இது. ஆகவே, இந்தப் பாலத்தை இந்த ஆண்டு கட்டி முடிக்க....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பாடிய கவிதைக்கே கொடுக்கலாமே! நீங்கள் பாடின கவிதைக்கே பாலம் கட்டிக் கொடுக்கலாமே!

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சிறிய வேண்டுகோள். சங்க காலத்தில் புலவர்களுக்கெல்லாம் சன்மானங்கள் வழங்கப்படும். அதுபோல அமைச்சர் ஏதாவது பரிசு கொடுப்பார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். (சிரிப்பு) அந்தப் பாலத்தை இந்த நடப்பாண்டே கட்டிக் கொடுப்பார்களா என்பதையும் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள பாலம் செங்கோட்டை-சாம்பவரம்-வடகரை சாலையில் கிலோ மீட்டர் 6/0-லிருந்து அச்சன்புதூர் செல்லும் சாலையில் குறுக்கிடும் அனுமான் நதியின் கிலோ மீட்டர் 2/1.0-ல் அமைந்துள்ளது. இந்தப் பாலத்தை, நான் அந்த மாவட்டத்தினுடைய அனுமான் நதியின் பாசனப் பகுதிகளை ஆய்வு செய்யும்போது நேரடியாகப் பார்த்தேன். அப்போது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் அந்தப் பகுதியிலிருக்கின்ற மக்களும் அந்தப் பாலத்தினுடைய அவசியத்தை எடுத்துச் சொன்னார்கள். இந்தப் பாலமானது மாவட்ட இதர சாலையில் உள்ளதாகும். இவ்விடத்தில் நீர்வழிப் பாதையின் அகலம் 14.40 மீட்டர் ஆகும். இவ்விடத்தில் 3.6 மீட்டர் நீளம் கொண்ட 4 கண்களுடைய குறுகலான பாலம் வலுவிழந்த நிலையில் உள்ளது. இருப்பினும் தற்போது இதன் வழியாக போக்குவரத்து நடைபெற்று வருகிறது. இவ்விடத்தில் 8 மீட்டர் நீளம் கொண்ட 2 கண்களுடைய R.C.C. பாலம் திரும்பக் கட்ட தோராயமாக ரூபாய் 50 இலட்சம் தேவைப்படும். 'நபார்டு' நிதியுதவியுடன் 120 கோடி செலவினத்தில் புதிய பாலங்களைக் கட்டுதல் மற்றும் பாலங்களைத்

திரும்ப கட்டுதல் திட்டத்தின்கீழ் 215 பாலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. அதில் அனுமான் நதி பாலமும் இடம் பெற்றுள்ளது. வருகின்ற நிதியாண்டில் 'நபார்டு' நிதி உதவி கிடைத்தவுடன் இப்பணி விரைந்து முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எம். சுப்பையா பாண்டியன்.

திரு. எம். சுப்பையா பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 63, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

63—

சட்டக் கல்லூரி

வினா 63263—திரு. கே.எஸ். தென்னரசு:

மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோட்டில் சட்டக் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.எஸ். தென்னரசு.